தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 31, திருவள்ளுவர் ஆண்டு-2049

2018 ஜூன் 14, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

நோய் இன்னதென்று ஆராய்ந்து, அதன் அடிப்படைக் காரணத்தையும் ஆய்ந்து, முதலில் அதனைத் தீர்க்கும் வழியை ஆய்ந்து, அது உடலுக்கு ஏற்றவாறு அறிந்து, செய்வதே சிறந்த மருத்துவம் ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

191—

குடியிருப்புகளைச் சீரமைத்தல்

***5632—திரு. நா. கார்த்திக்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி, 64–வது வட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சி, 64–வது வட்டம், சிங்காநல்லூர், உப்பிலிபாளையத்தில், உழவர் சந்தை அருகில் அமைந்துள்ள 960 அடுக்குமாடிக் குடியிருப்புகள், தவணை முறைத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டன. எனவே, சீரமைப்புப் பணிகளை குடியிருப்பின், உரிமையாளர்களே முன்வந்து செய்துகொள்ள வேண்டும் என்று வாரியத்தினுடைய விதிமுறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாநகராட்சி, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட 64–வது வட்டத்தில் 1986 ஆம் ஆண்டு, சுமார் 32 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. அந்த வீடுகள் பழுதடைந்திருக்கின்றன என்றும், இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கின்றன என்றும், கடந்த 2016 ஆம் ஆண்டும், 2017 ஆம் ஆண்டும் நடைபெற்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் அந்த மக்களைப் பாதுகாக்கக்கூடிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது என்று அன்றைக்கு நான் வலியுறுத்திப் பேசினேன். அன்றைய வீட்டு வசதித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தப் பேரவையில் பதில் தந்திருக்கின்றார்கள். விரைவிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளையும் கலந்துபேசி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று 2016 ஆம் ஆண்டும் சொன்னார், 2017 ஆம் ஆண்டும் சொன்னார். ஆனால் கொடுக்கப்பட்டிருக்கின்ற வினாவுக்கு இன்றைக்கு பதிலுரை வழங்கியிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், பயனாளிகளே அந்த வீடுகளுக்கான பராமரிப்புப் பணிகளைச் செய்ய வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மேலான கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் குறிப்பிட்டதைப்போல மொத்தம் 960 வீடுகள் அந்தக் குடியிருப்புப் பகுதியில் இருக்கின்றன. அதில் முழுத் தொகையையும் கட்டி முடித்தவர்கள் 700 பேர். முதல் ஒதுக்கீடு பெற்றவர்களிடம் விலைக்கு வாங்கியவர்கள்*

2018 ஜூன் 14]

சுமார் 140 பேர், பணமே கட்டாமல் அரசிடம் நிலுவையில் இருக்கக்கூடிய பத்திரங்கள் 120. 10 சதவிகித உரிமையாளர்கள் யார் என்றே தெரியவில்லை. இந்நிலையில் அங்கிருக்கக்கூடிய மக்களிடத்தில் ஒற்றுமை இல்லை. அதேநேரத்தில், ஆறு மாதங்களுக்கு முன்பு அரசாங்கம் மூலமாக உடனடியாக அந்த இடிந்த வீடுகளையெல்லாம் காலி செய்யவேண்டுமென்று எச்சரிக்கை நோட்டீஸ் கொடுத்தார்கள். ஆகவே, இதுபோன்ற ஒரு சூழ்நிலையில், அரசாங்கமே ஒரு கண்காணிப்புக் குழுவை அமைத்து, அங்குள்ள மக்களை ஒற்றுமைப்படுத்தி, வீடுகளை அந்த மக்கள் கட்டிக்கொள்வதற்கு மானியத்துடன்கூடிய கடன் உதவியை வழங்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்பாடு செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால், கோவை வீட்டு வசதிப் பிரிவின்மூலம் 1984–1986 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாநகராட்சி, 64–வது வட்டம், சிங்காநல்லூர், உப்பிலிபாளையத்தில் புல எண்கள் 256, 260, 261, 264 மற்றும் 266 ஆகியவற்றில் மொத்தம் 17.55 ஏக்கர் நிலப்பரப்பில் பொது மக்களுக்காக 960 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. இந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் தவணை முறைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இக்குடியிருப்புகளின் பராமரிப்பு, அப்பகுதி அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமையாளர் சங்கங்களிடம் 30–8–2000 நாளன்று ஒப்படை செய்யப்பட்டு, இன்று வரை அந்தச் சங்கங்களின் பொறுப்பில்தான் அக்குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சிங்காநல்லூர், உப்பிலிபாளையத்தில் மொத்தம் கட்டப்பட்ட 960 அடுக்குமாடிக் குடியிருப்புகளில், அனைத்து குடியிருப்புகளும் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன. இதில் இதுவரை சுமார் 700 குடியிருப்புகளுக்கு கிரயப் பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 260 வீடுகளில் 140 வீடுகளின் ஒதுக்கீடுதாரர்கள் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்தியுள்ளார்கள். ஆனால், ஒதுக்கீடுதாரர்கள் இறந்த பின்பு வாரிசுதாரர்களை முடிவு செய்ய இயலாமை, ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து வேறு நபர்கள் உரிமை*

பெற்ற இனங்கள், ஒதுக்கீடுதாரர்களுக்கு உரிய முகவரிகள் இல்லாமை போன்ற பல்வேறு காரணங்களால், விற்பனைப் பத்திரத்தை வாரிய விதிமுறைகளின்படி 140 பேர்களுக்கு வழங்க இயலவில்லை. இதுதவிர மீதமிருக்கின்ற 120 ஒதுக்கீடுதாரர்கள், தங்களது குடியிருப்பிற்கான முழுத் தொகையையும் செலுத்தாமல் உள்ளனர்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டதிலிருந்து அவற்றை அக்குடியிருப்பு உரிமையாளர் சங்கங்களிடம் ஒப்படைக்கும் வரை, அதனைப் பராமரிக்கும் பணிகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொள்ளும். பின்னர், குடியிருப்பு உரிமையாளர் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து, அந்தப் பராமரிப்புப் பணிகளை குடியிருப்பு உரிமையாளர்களே தங்களது குடியிருப்பு சங்கங்கள்மூலம் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு வீட்டு வாரியத்தின் விதிமுறையாகும். அதன்படி, சிங்காநல்லூர், உப்பிலிபாளையத்தில் 960 அடுக்குமாடிக் குடியிருப்புகள், 1986 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டதிலிருந்து, அப்பகுதி சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட நாளான 30–8–2000 வரை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமே குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தது. அதன் பிறகு இன்று வரை குடியிருப்புச் சங்கமே பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இக்குடியிருப்புகள் யாவும் அவற்றை வாங்கிய ஒதுக்கீடுதாரர்களுக்கு முழு உரிமையானது என்பதால், அதனைப் பராமரிப்பதும், விதிமுறைகளை மீறாமல் சீரமைத்துக்கொள்வதும் அவர்களுடைய கடமையாகும்.

இத்தகைய சூழ்நிலையில் சிங்காநல்லூர், உப்பிலிபாளையத்தில் கட்டப்பட்டு ஒதுக்கீடுதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில், வீட்டு வசதி வாரியத்தின்மூலம் தற்போது எவ்வித பழுதுபார்ப்புப் பணிகளையும் மேற்கொள்ள விதிமுறைகளின்படி வழிவகையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட, 40–வது

வட்டத்தில், இந்திய உணவுக் கழகத்திலிருந்து மேற்குப்புறமாக கணபதி பகுதிக்குச் செல்லக்கூடிய 50 அடி திட்ட சாலையில், இந்திரா நகர் என்ற பகுதியில், 400–க்கும் மேற்பட்ட சாதாரண ஏழையெளிய மக்கள் வசித்து வருகிறார்கள். அந்த மக்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பிலோ அல்லது குடிசைமாற்று வாரியத்தின் சார்பிலோ அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதைப்போலவே, தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோளை வைத்தேன். சிங்காநல்லூர், உப்பிலிபாளையம், 64–வது வட்டத்திலே கட்டப்பட்டு, இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய அந்தக் குடியிருப்புகளுக்கு அரசின் சார்பிலே மானியத்துடன் கடன் உதவி வழங்குவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்று கேட்டிருந்தேன். அதற்கு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விடையளிக்கவில்லை. அதற்கு விடையளிப்பாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டப்பட்டு, ஒதுக்கீடுதாரர்களுக்கு முழுமையாக வீடும் வழங்கப்பட்ட பின்பு, எந்தப் பணிகளையும் மேற்கொள்ள மானியத்துடன்கூடிய கடனுதவியை வழங்குவதற்கு விதிமுறைகளில் இடமில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தினை ஆய்வு செய்து, அதற்கு உரிய பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், 40–வது வட்டத்தில், சில பகுதிகளில் இருக்கின்ற குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு, அங்கு நிரந்தரக் குடியிருப்புகள் கட்டித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார். அந்தப் பகுதிக்குச் சென்று ஆய்வு செய்து, உண்மையிலேயே அவர்கள் குடிசைப் பகுதியில் குடியிருந்தால், அவர்களுக்கு அந்தப் பகுதிகளிலேயே, உறுதியான கட்டடங்களில் குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 ஜூன் 14

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மும்பையிலே, தாராவி பகுதியிலுள்ள குடிசைகளையெல்லாம் மாற்றி, அவற்றைச் சீராக கட்டித் தருவதற்கும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தருவதற்கும் துபாய் நிறுவனம் ஒன்றுடன் அம்மாநில முதலமைச்சர் அவர்கள் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்கள். அதுபோன்ற ஒப்பந்தத்தை இங்கு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், எங்களது கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி, வேட்டவலம் பேரூராட்சிப் பகுதிகளில் எல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக சிமெண்ட் சாலை, கால்வாய்கள் எல்லாம் அமைப்பதற்கு ஏற்கெனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இப்போது தொகுதிகளுக்கு நிதி ஒதுக்கப்படாமல் இருக்கிறது. எனவே, நிதி ஒதுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டத்திலே தற்போது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, குடிசையில் வசிக்கின்ற மக்களுக்கு அந்த நிதியை வழங்கி, அந்த வீடுகளுக்கு அவர்களையே உரிமையாளர்களாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற குடிசைப் பகுதிகளில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, கிட்டத்தட்ட 13 இலட்சம் பேர் இருக்கிறார்கள் எனக் கண்டறியப்பட்டிருக்கின்றது. பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீடு கட்டுகின்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பகுதியாக குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு உறுதியான வீடுகள் கட்டப்பட்டு, அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் மூலமாக மத்திய அரசு ஒன்றரை இலட்சம் ரூபாய் வழங்குகிறது. மாநில அரசினுடைய பங்கு ஏழரை இலட்சம் ரூபாய். அங்கே ஒதுக்கீடுதாரர்கள் அதாவது

2018 ஜூன் 14]

யாருக்கெல்லாம் வீடுகள், மனைகள் தேவைப்படுகிறதோ, அவர்கள் கட்ட வேண்டியது 1½ இலட்சம் ரூபாய். ஆக, மத்திய அரசிடமிருந்து 1½ இலட்சம் ரூபாயைப் பெற்று, ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து 1½ இலட்சம் ரூபாயைப் பெற்று, மாநில அரசு தன்பங்காக 7½ இலட்சம் ரூபாயை வழங்கி, வீடுகளை கட்டி, மக்களுக்கு அளித்து வருகிறது. இதுவரை, இவ்வாறு 4½ இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், இந்தியாவிலேயே தமிழகம்தான் முன்னிலை மாநிலமாக இருக்கிறது என்பதைச் சாதனையாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

192—

புதிய நூலகம்

***12904—திரு. ரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் ஒன்றியம், மேலப்புலியூர் கிராமத்தில் புதிய நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஒன்றியம், மேலப்புலியூர் கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்கப்பட்டு, ஊராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*